வரையறுக்கப்பட்ட கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவுச் சிக்கன மற்றும் கடன் வழங்கும் சங்கமானது, நாட்டின் கல்விச் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் உறுப்புரிமையைக் கொண்டு உருவாக்கப்பட்டு, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் ஒரு கூட்டுறவுச் சங்கமாகும்.

சங்கத்தின் பிரதான காரியாலயம் மற்றும் கிளைக் காரியாலயங்களில் நிலவும் பின்வரும் பதவியிட வெற்றிடங்களுக்கு நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக, **சங்கத்தில் கடமையாற்றும் நிரந்தர ஊழியர்களிடமிருந்தும் வெளி விண்ணப்பதாரர்களிடமிருந்தும்** விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் பொது நிபந்தனைகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2026-11-26 ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ பின்வரும் விலாசத்திற்குப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரில் பெற்றோ பிரதான தலைவருக்குக் கிடைக்கக் கூடிய வகையில் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், இவ்விளம்பரத்தில் உள்ள QR குறியீட்டைப் பயன்படுத்தி ஒன்லைன் முறையிலும் விண்ணப்பிக்க வேண்டும். (QR குறியீட்டைப் பயன்படுத்தி ஒன்லைன் முறையில் மாத்திரம் விண்ணப்பிப்பது போதுமானதல்ல).

(கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்கள் தவிர்ந்த நாட்டின் ஏனைய அனைத்து மாவட்டங்களினதும் பிரதான நகரங்களில் சங்கத்தின் கிளைக் காரியாலயங்கள் அமைந்துள்ளன.)

இதற்காகத் திறமையான, உற்சாகமான மற்றும் அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய தகைமையுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பிரதிப் பிரதம நிறைவேற்று அதிகாரி (நிறைவேற்றுச் சேவைப் பிரிவு E.2 - தரம் III)

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் வர்த்தகம், முகாமைத்துவம், பொருளியல், கணக்கீடு, மனித வள முகாமைத்துவம் ஆகிய பாடங்களில் 01 ஐ அல்லது நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளுக்கு இணங்கக்கூடிய பாடமொன்றை உள்ளடக்கிய வகையிலான முதுமாணிப் பட்டத்துடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் நிறைவேற்று மட்டப் பதவியில் 03 வருட முன் அனுபவம்.

**அல்லது**

2. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் வர்த்தகம், முகாமைத்துவம், பொருளியல், கணக்கீடு, மனித வள முகாமைத்துவம் ஆகிய பாடங்களில் 01 ஐ அல்லது நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளுக்கு இணங்கக்கூடிய பாடமொன்றை உள்ளடக்கிய வகையிலான பட்டப்பின்படிப்பு டிப்ளோமா நெறியைப் பூர்த்தி செய்திருப்பதோடு, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் நிறைவேற்று மட்டப் பதவியில் 04 வருட முன் அனுபவம்.

**அல்லது**

**3.** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் வர்த்தகம், முகாமைத்துவம், பொருளியல், கணக்கீடு, மனித வள முகாமைத்துவம் ஆகிய பாடங்களில் 01 ஐ அல்லது நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளுக்கு இணங்கக்கூடிய பாடமொன்றை உள்ளடக்கிய வகையிலான பட்டத்துடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் நிறைவேற்று மட்டப் பதவியில் 05 வருட முன் அனுபவம்.

**சம்பள அளவுத்திட்டம் :-** மாதாந்தம் 57,400 - 1,200X 10

**வெற்றிடங்களின் எண்ணிக்கை :-** 01

## பிரதான நிதி முகாமையாளர் (நிறைவேற்றுச் சேவைப் பிரிவு E.2 - தரம் III)

**1.** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கணக்கீடு, வியாபார முகாமைத்துவம், வர்த்தகம் ஆகிய துறைகளில் முதுமாணிப் பட்டத்துடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் கணக்கு/கணக்காய்வுத் துறையில் நிறைவேற்று மட்டப் பதவியில் 02 வருட முன் அனுபவம்.

**அல்லது**

**2.** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கணக்கீடு, வியாபார முகாமைத்துவம், வர்த்தகம் ஆகிய துறைகளில் பட்டத்துடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் கணக்கு/கணக்காய்வுத் துறையில் நிறைவேற்று மட்டப் பதவியில் 04 வருட முன் அனுபவம்.

**அல்லது**

**3.** தொழில்நுட்பக் கல்லூரி அல்லது உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஒன்றில் நான்கு வருடக் கணக்கீடு, வர்த்தக டிப்ளோமாவுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் கணக்கு/கணக்காய்வுத் துறையில் நிறைவேற்று மட்டப் பதவியில் 05 வருட முன் அனுபவம்.

**அல்லது**

**4.** இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (CA Sri Lanka) இரண்டாம் கட்டத்தில் சித்தியடைந்திருத்தல் அல்லது பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் (CMA) இறுதி கட்டத்தில் சித்தியடைந்திருத்தலுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் கணக்கு/கணக்காய்வுத் துறையில் நிறைவேற்றுப் பதவியில் 05 வருட முன் அனுபவம்.

**சம்பள அளவுத்திட்டம் :-** மாதாந்தம் 57,400 - 1,200X 10

**வெற்றிடங்களின் எண்ணிக்கை :-** 01

## பிரதம தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (நிறைவேற்றுச் சேவைப் பிரிவு E.2 - III தரம்)

1. கணினி விஞ்ஞானம் தொடர்பான முதுகலைப்பட்டத்துடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொடர்புடைய துறையில் நிறைவேற்று மட்டப் பதவியில் 02 வருட அனுபவம்.

**அல்லது**

2. கணினி விஞ்ஞானம் தொடர்பான பட்டத்துடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொடர்புடைய துறையில் நிறைவேற்று மட்டப் பதவியில் 04 வருட அனுபவம்.

**சம்பள அளவு : மாதாந்தம் 57,400 - 1,200 X 10**

**வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01**

**பிரதம உள்ளக கணக்காய்வாளர் (நிறைவேற்றுச் சேவைப் பிரிவு E.2 - III தரம்)**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் கணக்கியல், வணிக முகாமைத்துவம், வர்த்தகம் தொடர்பான முதுகலைப்பட்டத்துடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கணக்கியல்/கணக்காய்வுத் துறையில் நிறைவேற்றுப் பதவியில் 02 வருட அனுபவம்.

அல்லது

2. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் கணக்கியல், வணிக முகாமைத்துவம், வர்த்தகம் தொடர்பான பட்டத்துடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கணக்கியல்/கணக்காய்வுத் துறையில் நிறைவேற்றுப் பதவியில் 04 வருட அனுபவம்.

அல்லது

3. இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி அல்லது உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் 04 வருட கணக்கியல்/வர்த்தக டிப்ளோமாவுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கணக்கியல்/கணக்காய்வுத் துறையில் நிறைவேற்றுப் பதவியில் 05 வருட அனுபவம்.

அல்லது

4. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இரண்டாம் கட்டத்தில் சித்தியெய்தல் அல்லது சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் இறுதிக் கட்டத்தில் சித்தியுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கணக்கியல்/ கணக்காய்வுத் துறையில் நிறைவேற்றுப் பதவியில் 05 வருட அனுபவம்.

**சம்பள அளவு : மாதாந்தம் 57,400 - 1,200X 10**

**வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01**

**முகாமையாளர் (ஊடகம் மற்றும் மேம்பாடு) (நிறைவேற்றுச் சேவைப் பிரிவு E.3.1 - தரம் III)**

**1.** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் வெகுஜனத் தொடர்பாடல் / வெகுஜன ஊடகம் / தொடர்பாடல் கற்கைகள் தொடர்பான பட்டத்துடன், நிறைவேற்று மட்டத்தில் 03 வருட முன் அனுபவம்.

**அல்லது**

**2.** க.பொ.த. (உ/த) சித்தியுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் வெகுஜன ஊடகம் / வெகுஜனத் தொடர்பாடல் / வெகுஜன ஊடகம் மற்றும் மேம்பாடு தொடர்பில் ஒரு வருடத்திற்குக் குறையாத டிப்ளோமா நெறியொன்றைப் பூர்த்தி செய்திருப்பதோடு, சம்பந்தப்பட்ட துறையில் நிறைவேற்று மட்டத்தில் 05 வருட முன் அனுபவம்.

**அல்லது**

**3.** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் வெகுஜனத் தொடர்பாடல் / வெகுஜன ஊடகம் / தொடர்பாடல் கற்கைகள் தொடர்பான பட்டத்துடன், ஆட்சேர்ப்புச் செய்யப்படும் கூட்டுறவுச் சங்கம் / சமாசத்தின் பதவிநிலை உத்தியோகத்தர் பதவியில் 05 வருட முன் அனுபவம்.

**அல்லது**

**4.** க.பொ.த. (உ/த) சித்தியுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் வெகுஜன ஊடகம் தொடர்பான உயர் டிப்ளோமா / வெகுஜனத் தொடர்பாடல் / வெகுஜன ஊடகம் மற்றும் மேம்பாடு மற்றும் ஒரு வருடத்திற்குக் குறையாத டிப்ளோமா நெறியொன்றைப் பூர்த்தி செய்திருப்பதோடு, ஆட்சேர்ப்புச் செய்யப்படும் கூட்டுறவுச் சங்கம் / சமாசத்தின் பதவிநிலை உத்தியோகத்தர் பதவியில் 07 வருட முன் அனுபவம்.

**சம்பள அளவுத்திட்டம் :-** மாதாந்தம் 50,600 - 900 X 10

**வெற்றிடங்களின் எண்ணிக்கை :-** 01.

**சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்றுச் சேவைப் பிரிவு E.3.2 - III தரம்)**

1. 03 வருட அனுபவத்துடன் இலங்கை மீயுயர் நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்த சட்டத்தரணியாக இருத்தல்.

**சம்பள அளவு : மாதாந்தம் 48,400 - 720 X 10**

**வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01**

**நிர்வாக உத்தியோகத்தர் (நிறைவேற்றுச் சேவைப் பிரிவு E.3.2 - III தரம்)**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் மனித வள முகாமைத்துவம் அல்லது நிருவாகம் தொடர்பான பட்டத்துடன், மனித வள முகாமைத்துவம் அல்லது நிறுவன நிருவாகம் தொடர்பில் முகாமைத்துவ மட்டப் பதவியில் 03 வருட அனுபவம்.

**அல்லது**

2. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொடர்புடைய துறை சார்ந்து ஒரு வருடத்திற்கு குறையாத மனித வள முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருப்பதுடன், மனித வள முகாமைத்துவம் அல்லது நிறுவன நிருவாகம் தொடர்பில் முகாமைத்துவ மட்டப் பதவியில் 05 வருட அனுபவம்.

**அல்லது**

3. மேலே 1, 2 இல் குறிப்பிடப்பட்ட கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளில் ஒன்றுடன், ஆட்சேர்ப்புச் செய்யப்படும் கூட்டுறவுச் சங்கம்/ஒன்றியத்தின் பதவி நிலைத் தரப் பதவியில் 10 வருட அனுபவம் மற்றும் சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

4. மேலே 1, 2 இல் குறிப்பிடப்பட்ட கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளில் ஒன்றுடன், ஆட்சேர்ப்புச் செய்யப்படும் கூட்டுறவுச் சங்கம்/ஒன்றியத்தின் தொழிற்பாட்டுச் சேவைப்

பிரிவில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்/ முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (கணக்கியல்)/ கணக்காய்வு உதவியாளர் பதவியில் 15 வருட அனுபவம் மற்றும் சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு : மாதாந்தம் 48,400 - 720 X 10**

**வெற்றிடங்களின் எண்ணிக்கை – 04**

**உதவி கணக்காளர் (நிறைவேற்றுச் சேவைப் பிரிவு E.3.2 - III தரம்)**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் வர்த்தகம்/ நிதி முகாமைத்துவம்/ கணக்கியல் துறையில் பட்டத்துடன், கணக்கியல் துறையில் நிறைவேற்று மட்டத்தில் 02 வருட அனுபவம்.

அல்லது

2. இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி அல்லது உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் 04 வருட கணக்கியல் டிப்ளோமா பாடநெறியுடன், கணக்கியல் / வர்த்தகத் துறையில் நிறைவேற்று மட்டத்தில் 02 வருட அனுபவம்.

அல்லது

3. பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இரண்டாம் கட்டத்தில் சித்தி அல்லது சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் இரண்டாம் கட்டத்தில் சித்தியுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கணக்கியல் துறையில் நிறைவேற்று மட்டப் பதவியில் 02 வருட அனுபவம்.

அல்லது

4. கணக்கியல் தொழில் நுட்பவியலாளர் நிறுவனத்தின் (AAT) மூன்றாம் கட்டத்தில் சித்தியுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கணக்கியல் துறையில் நிறைவேற்று மட்டப் பதவியில் 05 வருட அனுபவம்.

அல்லது

5. மேலே 1, 2, 3 இல் குறிப்பிடப்பட்ட கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளில் ஒன்றுடன், ஆட்சேர்ப்புச் செய்யப்படும் கூட்டுறவுச் சங்கம்/ஒன்றியத்தின் பதவி நிலைத் தரப் பதவியில் 07 வருட அனுபவம் மற்றும் சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு : மாதாந்தம் 48,400 - 720 X 10**

**வெற்றிடங்களின் எண்ணிக்கை - 2**

**பொது நிபந்தனைகள்**

- விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். எனினும், தற்போது கூட்டுறவுச் சேவையில் ஈடுபட்டுள்ள ஒருவருக்கு இந்த உச்ச வயது வரம்பு ஏற்புடையதாகாது.
- மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்குரிய மாதாந்தச் சம்பளத்திற்கு மேலதிகமாக ரூ. 17,800/- வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவும், அங்கீகரிக்கப்பட்ட ரூ. 11,000/- கொடுப்பனவும் உரித்தாகும்.
- இப்பதவி நிரந்தரமானது, ஆனால் ஓய்வூதியமற்றது. நியமனம் பெறுபவர் ஊழியர் சேமலாப நிதியத்திற்காக 10% பங்களிப்புச் செலுத்த வேண்டும் என்பதுடன், நிறுவனத்தினால் 15% பங்களிப்புச் செய்யப்படும்.
- விண்ணப்பதாரர்கள் சுயவிபரம் மற்றும் அனைத்துக் கல்வி, தொழில் தகைமைகளையும் உள்ளடக்கி தம்மால் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட சுயவிபரத்திரட்டுடன் (CV), இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவ மாதிரிக்கு அமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தையும் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டும்.

**வரையறுக்கப்பட்ட கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவுச் சிக்கன மற்றும் கடன் வழங்கும் சங்கம்**

**.....** பதவிக்கான விண்ணப்பப் படிவம்

01.விண்ணப்பதாரரின் முழுப் பெயர் :- .....

.....

02.முதலெழுத்துக்களுடன் பெயர் :- .....

.....

03. நிரந்தர முகவரி :- .....

.....

.....

04. நிரந்தர வதிவிட மாவட்டம் :- .....

05.பிறந்த திகதி:- ...../...../..... 06.வயது :- வருடம் ..... மாதம்:-..... நாள் :- .....

07. தேசிய அடையாள அட்டை இலக்கம் :- .....

08. ஆண் / பெண் :- ..... 09. விவாகமானவரா/விவாகமாகாதவரா :-.....

10. தொலைபேசி இலக்கம் :- ..... 11.Whatsapp இலக்கம் :- .....

12.E- Mail :- .....

13.கோரப்படும் அடிப்படைத் தகைமைகள் :-.....

.....

.....

.....

.....

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துவதுடன், கீழ்க்காணும் விடயங்களுக்கும் இணங்கியே இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்றேன் என உறுதிப்படுத்துகின்றேன்.

- நாட்டின் எந்தவொரு கிளைக் காரியாலயத்திலும் சேவையாற்றச் சம்மதிக்கின்றேன்.
- பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர், பணிபுரியும் இடத்தை நிர்ணயிப்பது பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின்படியே இடம்பெறும் என்பதை நான் நன்கு அறிவேன் என்பதுடன், அதற்கமைய வழங்கப்படும் சேவை நிலையங்களுக்கு எனது இணக்கத்தை இதன்மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

..... .....

திகதி கையொப்பம்

தே.அ.அ.இல :- .....

பெயர் : .....

- விண்ணப்பதாரர்கள் தங்களது கல்வி மற்றும் தொழில் தகைமைகளைக் குறிக்கும் சான்றிதழ்களின் நிழற்பிரதிகள், பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதி ஆகியவற்றை உண்மைப் பிரதிகள் எனத் தாங்களாகவே உறுதிப்படுத்தி, 2026-11-26 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரில் கொண்டுவந்தோ பிரதான தவிசாளரிடம் ஒப்படைக்க வேண்டும். (விண்ணப்பத்தை உள்ளடக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்)
- விண்ணப்பதாரர்கள் சங்கத்தின் எந்தவொரு கிளைக் காரியாலயத்திலும் சேவையாற்றுவதற்குப் பொருத்தமான உடல் மற்றும் உளத் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், சங்கத்திற்குச் சொந்தமான நாடளாவிய ரீதியில் உள்ள எந்தவொரு கிளைக் காரியாலயத்திலும் சேவையாற்றச் சம்மதிப்பவராக இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் வெற்றிடங்கள் நிலவும் காரியாலயங்களுக்குப் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின்படி நியமிக்கப்படுவார்கள் என்பதால் அதற்கு இணங்க வேண்டும்.
- மேலே குறிப்பிடப்பட்டவாறு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது சங்கத்தின் பிரதான தவிசாளருக்குக் கிடைக்கக்கூடிய வகையிலோ விண்ணப்பங்களை அனுப்புவது கட்டாயமானதாகும் என்பதுடன், அவ்வாறான அனைத்து விண்ணப்பதாரர்களும் இந்த விளம்பரத்தில் காட்டப்பட்டுள்ள ஞசு குறியீட்டைப் பயன்படுத்தி நிகழ்நிலை (Online) முறையிலும் விண்ணப்பித்திருக்க வேண்டும். (QR குறியீட்டைப் பயன்படுத்தி நிகழ்நிலை முறையில் மாத்திரம் விண்ணப்பிப்பது போதுமானதல்ல.)



- கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 2025/03 மற்றும் 2025/04 ஆகிய சுற்றறிக்கைகளுக்கு அமைய இந்த ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படும்.
- நேர்முகப் பரீட்சை மூலம் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பதுடன், பணிப்பாளர் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

பிரதான தலைவர்
வரையறுக்கப்பட்ட கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் வழங்கும் சங்கம்,
இல. 294, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி இலக்கம்:- 011-2266000